27th March 1969] [திரு. எஸ். மாதவன்]

பரிவோடு பரிசீலிக்கும் என்று கூறி, போனஸ் பற்றிய தீர்மானத்தை வலியுறுத்தக் கூடாது என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU G. KRISHNAMOORTHY : I thank the Government for the assurance given. In view of the assurance given by the Minister for Education, I withdraw the Resolution.

The Resolution was, by leave, withdrawn.

(3) CHANGE OF NAME OF THE CAPITAL OF TAMIL NADU.

MR. CHAIRMAN : The hon. Member, Thiru N. R. Thiagarajan, is not in his seat. The resolution is deemed to have been withdrawn.

(4) COTTON MILLS WORKERS' RELIEF COMMITTEE

திரு வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட என்னுடைய தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் திறக்கப்படும் வரை, பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 'பஞ்சாலைத் தொழிலாளர் நிவாரணக் கமிட்டி' என்பதாக ஓர் அமைப்பின் ஏற்படுத்த வேண்டுமென்றும், இதற்காகத் தனியான நிவாரணநிதி ஒன்று ஒதுக்கலாமென்றும் இம்மன்றம் அரசினருக்குப் பரிந்துரைக்கின்றது".

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைக் கொடுத்த நேரத்திலே கோவையிலிருந்து ஒரு பெரிய தொழிலாளர் குழு ஒன்று சென்னை வரை பாத யாத்திரையாக நடந்து வந்து, அரசியல் சாசன அடிப்படையில் Mass petition ஒன்றை, அசெம்பிளி துணை சபாநாயகருக்குக் கொடுத்திருக்கிறது. அவர்கள் ஆக்க பூர்வமான யோசனையை அரசாங்கத்திற்கு சொல்லவும், அரசாங்கத்திற்கு இக்கட்டான எந்த நிலைமையும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தோடும், இப்படிப்பட்ட குழு வேண்டுமென்ற யோசனையைச் சொன்னார்கள். அரசாங்கமும் அந்த நல்ல யோசனையை ஏற்றுக் கொண்டு இப்போது கொள்கை அளவில், ஏன், செயலளவில் கூட அதை அமைப்பதற்கான எல்லாவிதமான நடவடிக்கையையும் எடுத்திருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். இந்த நேரத்தில் கூட இந்தத் தீர்மானம் அவசியபபடுகிறது என்பதை மட்டும் ஒரு சில வார்த்தைகளில் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே இரண்டு விதமான பிரச்னைகள் இருக்கின்றன. டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அமைப்பதாக அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தது. கொடுத்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகின்றன. அரசாங்கம் "அமைக்கிறோம், அமைக்கிறோம்", என்று சொல்லிக்கொண்டிருப்பதைக் காட்டிலும் அதைத் தயவு செய்து அமைத்துவிடுங்களேன் என்று கேட்டுக் கொள்கிறேன். கார்ப்பரேஷன் அமைப்பதில் பல கசப்பான உண்மைகள் எல்லாம் இருக்கின்றன. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள். குறிப்பாக சில ஆலைகளை திறக்கவே முடியாது என்றார்கள். நானும் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறேன். ஆனால் இந்தக் கசப்பான உண்மைகளை மனதில் வைத்துக்கொண்டு "திறக்கிறோம், திறக்கிறோம்" என்று வெறும் உத்தரவாதங்களை கொடுப்பதற்குப் பதிலாக எத்தனை மில்களைத் திறக்க முடியும், எந்தெந்த மில்களைத் திறக்கப் போகிறோம் என்பதை கார்ப்பரேஷன் அமைத்து திறந்து விடுங்கள் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். இதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால் நிதிநிலையில் கூறியபடி இருக்காமல் இந்தக் கார்ப்பரேஷன் அமைக்கும் முயற்சியும் தேங்கிய நிலையில் இருக்கக்கூடாது.

இந்தக் கமிட்டியிடம் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிப்படி ரூ. 15 லட்சத்தைக் கொடுத்து விடுங்கள். தொழிற்சங்கங்கள் சுமார் 15 லட்சம் கொடுப்பதாக எல்லா சங்கங்களும் கட்சி மாறுபாடு இல்லாமல் ஒப்புக் கொண்டிருக்கின்றன. அந்த சங்கங்கள் கொடுக்கிற வரையில், காத்திராமல் அரசாங்கமே கொடுத்து இந்த கமிட்டி அமைக்க ஏற்பாடு செய்தால் நிவாரணம் கிடைக்க வேண்டிய சமயத்தில் கிடைக்க வேண்டியவர்களுக்குப் போய்ச் சேரும் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம். இந்தத் தீர்மானம் நிச்சயமாக எந்தவிதமான கொள்கை வேறுபாட்டிற்கும் உள்ளாகாது என்று நினைக்கிறேன். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இந்தப் பிரச்னை பொதுவானது. இதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், மற்ற கட்சிகள் என்ற வேறுபாடு இருக்க முடியாது. நிவாரணக் கமிட்டி அமைப்பதனால் தொழிலாளர்களுக்கும் ஒரு ஆறுதல் கிடைக்கும். கருத்து வேறுபாடு இருக்காது. ஆங்கிலத்தில் சொல்வார்கள் **it is a perfectly neutral and innocent resolution.** இதை நிறைவேற்றினால் இந்தச் சபை முழுவதும் தொழிலாளர்களுடைய சிரமமான நிலையில் அக்கறை காட்டுகிறோம். அதைப்பற்றி கவலை கொண்டிருக்கிறோம் என்று மக்கள் அறிய முடியும். நிவாரணம் விரைவில் கிடைப்பதற்கு நிச்சயமாக மேல்சபை செயல் பட்டது என்பதைக் காண்பிப்பதற்கும் பெரிய அடையாளமாக இருக்கும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்த தீர்மானத்தை சபையின் பரிசீலனைக்கு விடுகிறேன், வணக்கம்.

[Thiru N. V. Natarajan in the Chair]

திரு எஸ். வி. லட்சுமணன் : துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் ஈஸ்வரமூர்த்தி அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசும்போது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மூடிய மில்களில் பணியாற்றிய ஊழியர்களுக்கு நிரந்தரமான நிவாரணம் வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையை நண்பர் தன்னுடைய தீர்மானத்தில் பிரேரேபித்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அளவில் பார்க்கும் போது இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் கோவையில் பல மில்கள் மூடிக் கிடந்தன. அந்த நேரத்தில் கோவையிலிருந்து தொழிலாளர்கள் தலைவர்கள் பலர் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். கேட்டுக் கொண்ட நேரத்தில் திருச்சியில் கூடினார்கள். இரு தரப்பிலும் கருத்துக்களை எடுத்துக் கூறி, கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். மில்கள் திறக்கும் வரையில் தொழிலாளர்களுக்கு ஏதாவது சகாயம் செய்வது என்ற முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் கடைசியில் பார்க்கும்போது, அவர் சொல்லியபடி பூரணமாக அதை அனுசரிக்க முடியாவிட்டாலும், ஓரளவு அந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு சர்க்கார் உதவி செய்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப்போன்று இன்றைய முதலமைச்சர் அவர்கள் சுமார் பத்துப் பதினைந்து தினங்களுக்கு முன்னால், இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசும்போது, கோவையிலிருந்து தங்களுக்கு தகவல் வந்திருப்பதாகவும், தொழிலாளர் தலைவர்கள் பலர் வேலையில்லாத தொழிலாளர்களுக்கு, தொழிலாளர்கள் மத்தியில், ஒரு நாளோ இரண்டு நாளோ சம்பளத்தைப் பெறுவது என்றும் அத்தோடு சர்க்காரும் ஒரு தொகை ஒதுக்கி வேலையில்லாத தொழிலாளர்களுக்கு நிவாரணம் தேடக் கூடிய முறையில் நிதியைச் சேர்க்கக் கூடுமென்றும், வற்புறுத்திச் சொன்னார்கள். இன்றைய முதலமைச்சர் சொன்னதற்கும் முன்னாள் முதலமைச்சர் சொன்ன கூற்றுக்கும் இணங்க நண்பர் ஈஸ்வரமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டது போல, அந்த நிவாரண நிதியை நிரந்தரமாகச் செய்தால் உண்மையாகவே சிறந்த ஆதாயமாக இருக்குமென்று கருதுகிறேன். இப்போது 15 ஆயிரம் மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். கோவை ஜில்லாவில் அவர்கள் இன்று எப்படி வாழ்க்கையைச் சரி செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது சிரமமாக இருக்கிறது. பல தொழிலாளர்கள் மில்களுக்குச் சென்று கொண்டிருந்ததால் வேறு வேலை செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். பல

27th March 1969] [திரு. எஸ். வி. லட்சுமணன்]

தொழிலாளர்கள் கிணறு வெட்டும் வேலைக்குச் சென்று கஷ்டப்பட்டு ஊதியம் தேடி அன்றாட வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை எண்ணும்போது மத்திய சர்க்கார் உதவியோடு மாநில அரசாங்கமும் சேர்ந்து மூடிய மில்களைத் திறக்கும் பிரச்னையை மேற்கொள்வதற்கு முன்பு, அதற்குள்ளாக அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுப்பது சிறந்தது என்று எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே அவர்களுக்கு நிச்சயமாக நிவாரணம் அளிக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தத் தொழிலாளிகள் பணியாற்றிய மில்களில் பண்டுகள் இருந்தன. பல நாட்கள் வேலையில்லாமல் இருப்பதால் கிடைக்க வேண்டிய தொகையெல்லாம் பெற்றுவிட்டார்கள். பிராவிடண்ட் பண்டு நிதியிலிருந்து எவ்வளவு பெற முடியுமோ அதைப் பெற்று ஜீவனம் நடத்திவிட்டார்கள். பல மில்களில் அந்தப் பிராவிடண்ட் பண்டு நிதியைக்கூட எடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதைக் காண்கிறோம். முதலாளிகள் தங்கள் பங்கை செலுத்தவில்லை. முதலாளிகள் கொடுப்பதற்கு மறுத்துவிட்டார்கள் பல்வேறு காரணங்களைக் காட்டி. பல மில்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் நிதியிருந்து தொகை பெற முடியாத நிலை இருக்கிறது. இன்றைக்குக் கூட பல தொழிலாளர் தலைவர்கள் சென்னையில் இருக்கிற அலுவலகங்களுக்கு வந்து எப்படியாவது பிராவிடெண்ட் பண்ட் நிதியிலிருந்து நிவாரணம் கிடைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டாலும் கூட, பல தொழிலாளர்களுக்கு அந்தச் சலுகை மறுக்கப்படுகிறது. காரணம், முதலாளிகள் தங்கள் பங்கைச் செலுத்தவில்லை.

ஆக, இத்தகைய கஷ்டங்கள் அதிகமாக இருக்கும் நேரத்தில் சர்க்கார், தொழிலாளர்கள்பால் கருணை கூர்ந்து, அவர்களுக்குச் சிறந்த முறையில் உதவி அளிக்க வேண்டுமென்று மீண்டும், மீண்டும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலமைச்சரவர்களும் அரசும் சிறந்த அக்கறை காட்டுகிறது. இங்கே உள்ள சட்டசபை அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் தொழிலாளர்கள் பால் அன்பு கொண்டிருக்கும் நேரத்தில், சிறந்த முடிவெடுக்க வேண்டியது அவசியம். ஒரு நிவாரண கமிட்டியை நிறுவி அவர்களுடைய துயர் துடைக்கும் முயற்சியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. எஸ். ராகவானந்தம் : தலைவரவர்களே, இந்த பஞ்சாலைப் பிரச்னையில் நம்முடைய அரசு செய்திருக்கக் கூடிய செயல்கள் மிகவும் பாராட்டக்கூடியவை என்பது அனைவரும் அறிந்ததே. இந்தப் பிரச்னைக்கு தீர்வுகாண ஆலோசனை சொல்வதற்கு முன்னால், இந்தப் பிரச்னை எப்படி உருவானது ; அது உருவானதற்கு காரணம் யார் என்பதை நாம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். பஞ்சாலையில் இந்த நிலைமை ஏற்பட்டது இன்றல்ல. தி.மு. கழக ஆட்சி ஏற்பட்டு இரண்டாண்டு காலமாகிறது. ஆனால் மில்கள் மூடப்படுவதற்கு காரணம்—நான் ஏற்கனவே ஒரு முறை பேசியிருக்கிறேன்—இதற்கு முன்னால் இருந்த அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் எடுக்கவில்லை என்பதே. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். இந்த அரசு வந்த பிறகா மூடிவிட்டார்கள் ? எப்போதோ செய்த காரியம் நம் தலையில் வந்து விடிந்திருக்கிறது. வேடிக்கையாகச் சொல்வார்கள். "நீ எண்டா ஜெயிலுக்குப் போனாய் என்றால், லட்சுமிகாந்தன் கொலைவழக்கில் குத்திவிட்டு ஜெயிலுக்கு போனானே, அவன் பக்கத்து வீட்டில் இருந்தவன் நான்" என்பார்கள். அது போல் அவர்கள் 20 ஆண்டுக் காலம் செய்ய வேண்டியதை செய்து விட்டுப் போய்விட்டார்கள். இப்போது நாங்கள் வந்ததால் அனுபவிக்கிறோம். இது முன்னார் செய்த தீ வினைகளின் விளைவு என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பி. யு. ஷண்முகம் : ஆலைகள் 1965-ஆம் ஆண்டில் மூட ஆரம்பித்தன. 1967-ம் ஆண்டு வரையில் ஏறக்குறைய 6 ஆலைகள்

மூடப்பட்டன. இதற்குப் பிறகு பாக்கி ஆலைகள் மூட ஆரம்பித்தன. 1965-லிருந்து மூட ஆரம்பித்தார்கள். அதன் விளைவு இது என்பதை மட்டும் ஞாபகப்படுத்துகிறேன்.

திரு. எஸ். ராகவானந்தம் : மூடுவதற்கு காரணம் என்ன என்று பார்த்தால், முதலில் பருத்தி விலையை உயர்த்தி இருக்கிறார்கள். அதைக் கட்டுப்பாடு செய்ய நமக்கு அதிகாரமில்லை. ஏற்கனவே இருந்தவர்கள் அதற்கு விலை வைக்க வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். **It is shooting up** அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : காரண காரியத்தைத் தேடிக் கொண்டு நேரத்தைப் போக்க வேண்டாம். கஷ்டப்படுகிறவர்களுக்கு நிவாரணம் வேண்டும். இந்த விவாதத்திற்கு மத்தியில் மாறுபட்ட சூழ்நிலை உண்டாக்க வேண்டாம் என்பது என்னுடைய கருத்து.

திரு எஸ். ராகவானந்தம் : தீர்வு காண்பதற்கு பூராவும் "analyse" பண்ணாமல் எப்படிச் செய்வது ? இதைச் சொல்ல வேண்டும். நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டும். ஒரு தவறான எண்ணம் பரப்பப்பட்டு இருக்கிறது. "தி.மு. கழக ஆட்சி பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை" என்று. மில்களை கைப்பற்றுவோம் என்று சொன்னதாக பத்திரிகையில் படித்தேன். இன்னொரு அறிக்கை விட்டார்கள். அது பொய்ச் செய்தியல்ல என்று நினைக்கிறேன் ."குறிப்பிட்ட தேதிக்குள் பஞ்சாலைகள் திறக்கப்படாவிட்டால் தமிழக அரசு போக்குவரத்து பஸ்கள் முன்னால் மறியல் செய்வோம்" என்று. மோத வேண்டிய இடம் அரசு பஸ்கள் அல்ல. மோத வேண்டிய இடம் முதலாளிகள் கிட்டே.

மாண்புமிகு திரு: பி. யு. ஷண்முகம் : மாண்புமிகு திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பரிகாரம் தேடலாம் என்று பெருந்தன்மையோடு சொன்னார்கள். அவர்களுடைய மனத் தூய்மையை நான் கொஞ்சம் கூட சந்தேகிக்கவில்லை. இந்த நேரத்தில்—அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள்—அவருக்கே நினைவு படுத்துகிறேன். இந்தப் பஞ்சாலைப் பிரச்னையில் அரசியலை புகுத்திவிட்ட காரணத்தால், அவர்களாக அடுத்த மாதம் 13-ம் தேதிக்குள் ஆலைகள் திறக்கப்படா விட்டால் போராட்டம் துவங்கும் என்று ஒரு தீர்மானத்தைப் போட்டு வைத்துக் கொண்டு, "இதிலே நீங்கள் அரசியல் பேசாதீர்கள் ; நாங்கள் மட்டும் போராட்டம் நடத்துவோம்" என்று சொல்வது நியாயமற்ற செய்கை என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : அரசியல் பேசாதீர்கள் என்று நான் சொல்லவில்லை. பேசினால் இனி கெட்டுப்போவதும் இல்லை. அரசியலில் இதை இழுக்க வேண்டாம். இப்போது எதற்கு நமக்கு அந்த ஞாபகம் வரவேண்டும் என்று தான்........

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : இப்போது தீர்மானம் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அல்லது வேலை கொடுக்க வேண்டும் என்பதுதான். இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு ராகவானந்தம் அவர்கள் பேசும்போது இது எப்படி உருவாயிற்று, அதற்குக் காரணம் என்ன, அந்தக் காரணத்தை வைத்துப் பரிகாரம் தேட முடியும் என்று ஆராய்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். அங்கத்தினா பேசும்போது சொன்னார்கள். "ஏன் அதை எல்லாம் பேசவேண்டும் ? பரிகாரம் மட்டும் சொல்லேன்" என்று சொன்னார்கள். இதைப் பேச வேண்டும் என்று சொல்கிறவர்கள் போராட்டத்திற்கு போகக்கூடாது. பரிகாரம் பற்றி பஞ்சாலை முதலாளி, தொழிலாளர்களுடன் உட்கார்ந்து பேசவேண்டுமென்று வேண்டுகோள் விட்டிருந்தால் நல்லது. நான் என்னுடைய உரையில் தொழிலாளர்கள், முதலாளிகளுக்கு வேண்டுகோள் விட்டேன். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அவர்கள் தீர்மானத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னேன். தீர்மானத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்லவில்லை. வேறு காரணங்களை சொல்லச் சொன்னேன். அப்படிச் செய்தால் எல்லா அரசியல் கட்சி

27th March 1969] [திரு ப. உ. சண்முகம்]

களையும் கூட்டி உட்கார வைத்துப் பேசி, முடிவு காண்பதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறோம். எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஆலோசனையையும் கேட்கிறோம். ஆனால் போராட்டத்தை அல்ல.

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு: தமிழக அரசு நிலை என்ன என்பது இன்னும் தெளிவு படுத்தப்படவில்லை என்பதை சொல்லிவிட்டுத் தான் இந்த நேரத்தில் அது தெரிய வேண்டும், இல்லாவிட்டால் போராட்டம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவையில் பேசும் போது நான் இந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள் பற்றி என்ன கொள்கை என்பது பற்றி விரிவாகப் பேசி யிருக்கிறேன். எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது, அவர்களுக்கே தெரியும். தெரிந்த உண்மை தான். அதை எடுத்து திரு. ராகவானந்தம் அவர்கள் பேசுவார் என்று கருதுகிறேன். அதற்குப் பிறகு அரசாங்க சார்பில் பதில் சொல்லும்போது நான் சொல்கிறேன்.

திரு. எஸ். ராகவானந்தம் : 1967 மார்ச்சுக்கு முன்னால் நான் போராட்டம் நடத்தும் போதெல்லாம் போராட்டம் நடத்துவோம் என்று இப்போது சொல்லும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சி நடத்தும் போது, "இந்த முதலாளிகளை எதிர்த்து ராகவானந்தம் போராடுகிறான் ; என்ன பெரிய போராட்டம்" என்று கிண்டல் செய்தது மட்டுமல்ல. வண்ணாரப் பேட்டையில் காங்கிரஸ் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். மூர்த்தி மூடிவிட்டார் ; ராகவானந்தம் முயற்சி என்று போடுவார்கள். அண்ணாவின் ஆட்சி ஏற்பட்ட பின் பேச வந்திருக்கிறேன். அந்தப் பெருமை அண்ணாவுக்கு. நிலைமை என்ன, எதற்காக இந்த நிலைமை என்று பார்க்க வேண்டும். அடுத்து லாபம் வந்த காலத்தில் அப்போது இருந்த முதலாளிகள்—நான் சொன்னால் கோபித்துக் கொள்கிறார்கள்—முதலாளிகள் 100-க்கு 100 " unadulterated Congressmen ". இதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் (instead of ploughing back the profit into the industry) வந்த லாபத்தில் டிவிடெண்ட் போக மீதி அந்தத் தொழிலில் போட்டு modernise பண்ணமல், நவீனமாக்காமல் வேறு diversified activities சினிமா கொட்டகை கட்டலாமா பங்களா கட்டலாமா, 10 லட்சத்திற்கு கட்டி 8 லட்சம் என்று எழுதுவோம் என்று செய்தார்களே தவிர, வந்த லாபம் என்ன ? இது one of the reasons என்று சொல்லுகிறேன். லாபத்தை அந்த industry-ல் போடவில்லை. இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும் முதலாளிகள். கோபித்துக் கொள்ளக் கூடாது. முதலாளிக்கு பெயரே காங்கிரஸ் தான், according to my understanding, it is.

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு : லாபகரமான மில்கள் எதுவும் விஸ்தரிக்கப்படவில்லையா / எந்தெந்த மில்கள் எத்தனை spindles விஸ்தரிக்கப்பட்டன என்று ஆதாரமில்லையா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எவ்வளவு spindles விஸ்தரிக்கப்பட்டு இருக்கின்றன என்று மிகவும் மன வருத்தத்தோடு கேட்கிறார்கள். கோபம் என்று சொல்லாமல் வருத்தம் என்று சொன்னேன். spindles நிறையப் போட்டிருக்கலாம். ஆனால் weaving ஆரம்பிக்கவில்லை. நூல் ஆலைகளைக் கொண்டு வந்தார்களே தவிர துணி நெய்கிற ஆலைகள் கொண்டு வரத் தவறி விட்டார்கள். நூலைத் தயாரிக்க ஆலைகளை வைத்து, spindles அதிகமாக்கினார்களே தவிர, துணி நெய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. கதிர்களை வைத்து நூலை அதிகமாகத் தயாரித்து பம்பாய், மகாராஷ்டிரம் என்று இந்த இடங்களுக்கு நூலை ஏற்றுமதி செய்து கொண்டு இருந்தார்கள். அங்கே உள்ள துணி நெசவு ஆலைகளை மார்க்கெட்டாக நம்பிக் கொண்டு இருந்தார்கள். அந்த நிலைமை காரணமாக இப்போது இந்த நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது.

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு: நூல் ஆலைகளை மட்டும் வைத்துக் கொண்டு வந்தார்கள், நெசவு ஆலை வைக்கவில்லை என்கிருர்கள். இங்கே தயாராகும் நூலுக்குக் கிராக்கி இருந்து கொண்டு இருந்தது. விசைத்தறிகளும், கைத்தறிகளும், வட இந்தியாவில் உள்ள ஆலைகளும் இந்த நூலை அதிகமாகப் பயன்படுத்தி வந்ததால் நூல் ஆலை மட்டும் நிறுவுவது லாபகரமாக இருந்தது. இதனுல் நெசவு ஆலைகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அந்தச் சூழ்நிலையில் நெசவு ஆலை களை ஏற்படுத்த அரசு முன் வரவில்லை. இப்போது நூல் தேக்கம் முதலியவை வட இந்தியா மார்க்கெட்டை மட்டும் நம்பி இருந்த தனுல் ஏற்படவில்லை. பருத்தி விலை உயர்வும் காரணமாகும்.

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்கம் : நான் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அமுலுக்கு வந்த காலத்தில் பம்பாயிலும், மகாராஷ்டிரத்திலும் நூற்பு ஆலைகள் இல்லை. துணி நெசவு ஆலைகள் மட்டும் இருந்தன என்பதைப் புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாம் நூல் ஆலைகளை மட்டும் ஏற்படுத்திக் கொண்டு இருந்தோம். நெசவு ஆலைகள் ஏற்படுத்தவில்லை. அவர்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட கூலத் திலும் நூற்பு ஆலைகள் அமைத்தார்கள். நாம் நூற்பு ஆலைகளை மட்டும் ஏற்படுத்தியதால் நாம் வெளி மாநில மார்க்கெட்டுகளை நம்பிக்கொண்டு இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நூல் தேங்கிக் கிடக்கிறது, நஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னுல் இதற்குக் காரணம் இது தான். இந்தக் குற்றச்சாட்டை நான் சொல்வதற்குக் காரணம், இதிலே உள்ள சிக்கலை தெளிவு படுத்த விரும்புகிறேன். பம்பாயிலும், மகாராஷ்டிரத் திலும் நூற்பு ஆலை ஏற்படுத்திக் கொண்டு இருந்த நேரத்தில், நாம் நெசவு ஆலைகளை ஏற்படுத்தத் தவறி விட்டோம். துணி நெய்கிற ஆலைகளை அப்போது ஏற்படுத்தி இருப்பார்களானுல் இந்தச் சங்கடம் இப்போது ஏற்பட்டு இருக்காது. இந்தச் சங்கடம் பரிபூர்ணமாகக் குறைந்திருக்கா விட்டாலும் கூட ஓரளவிற்குக் குறைந்திருக்கும்.

திரு. ஆர். கிருஷ்ணஸ்வாமி நாயுடு : விசைத் தறிகளை அன்றைக்கு எதிர்த்தவர்களுக்கே இது தெரிந்து இருக்கும்.

மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம் : நான் ஒப்புக் கொள்கிறேன். விசைத் தறிகளை விஸ்தரிக்கக் கூடாது என்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். நானும் கூட அன்றைக்குச் சொன்னேன். அதை மறுக்கவும் இல்லை, மறைக்கவும் இல்லை. விசைத் தறிகளைப் புகுத்தக் கூடாது என்ற கருத்தை ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் முன்பு இருந்தவர்கள் வர இருந்த ஆபத்தை உணர்ந்து நாட்டுக்குச் சொல்லி இருக்கலாம். சொல்லத் தவறிவிட்டார்கள். அதைச் செய்திருக்க வேண்டும். செய்யத் தவறி விட்டார்கள். இதை ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். வேறு ஒன்றும் இல்லை.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: முதலாளிகள் தொழிலாளர்கள் கொடுக்கக் கூடிய ஒத்துழைப்பையும், வரிச் சலுகைகளையும் வைத்துக் கொண்டு உடனடியாக மில்களை நடத்துவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிருர்கள். ஆகவே முதலாளிகளுடைய நல்ல ஒத்துழைப்பை நாம் பயன்படுத்தி ஆக்க பூர்வமாக உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம் : ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தொழிலாளர்கள் எவ்வளவு பணம் வசூலிக்கிருர்களோ அவ்வளவு பணத்தை அரசு கொடுக்கும் என்று அறிஞர் அண்ணு அவர்கள் உறுதி கொடுத்தார்கள். அதை இந்த அரசு என்றைக்கும் நடைமுறைப்படுத்தும். முதலாளிகள் ஒத்துழைப்புத் தர முன் வந்துள் ளார்கள் என்று கனம் உறுப்பினர் அவர்கள் கூறினுர்கள். எனக்குத்

தெரிந்து எந்த முதலாளியும் ஒத்துழைப்புத் தர முன் வந்ததாகத் தெரியவில்லை. எந்த முதலாளியாவது ஒத்துழைப்புத் தர முன் வந்தால் அதை நான் மனதார வரவேற்கிறேன்.

திரு. எம். எத்திராஜுலு: ஒரு கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதற்கு என்று ஒரு நாளைத் தனியாக ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். உத்தியோகப் பற்றற்ற தீர்மானத்தின் மீது இங்கே பேச முடியவில்லை. இருக்கின்ற தீர்மானங்களில் மூன்று கூட முடியவில்லை. இதற்குப் பிறகு இன்னும் ஆறு மாதங்களுக்குப் பிறகு தான் சபை கூடும். இப்படிப்பட்ட நிலைமை இனிமேல் ஏற்படாமல் இதற்கு என்று ஒரு நாளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

VICE-CHAIRMAN (THIRU N. V. NATARAJAN):

கனம் உறுப்பினர் அவர்களின் யோசனை கவனிக்கப்படும். இத்துடன் மன்றம் கலைந்து மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

The House then adjourned.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

101. Notification issued with G.O. Ms. No. 2398, Home, dated the 20th August 1968, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MSQ 3981, belonging to Thiru Theodore E. Hoffman of the United States Agency for International Development Mission to India. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

102. Notification issued with G.O. Ms. No. 2824, Home, dated the 25th September 1968, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle MDG 1328, belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Tiruchirappalli. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]

103. Notification issued with G.O. Ms. No. 345, Public (Elections IV), dated the 20th February 1969 in regard to the issue of the Tamil Nadu Legislators' Hostel (Accommodation) Rules, 1969. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Payment of Salaries Act, 1951 (Madras Act XX of 1951).]

104. Annual Financial Statement for 1969–70 and Supplementary Financial Statement for 1968–69 of the Tamil Nadu State Electricity Board. [Laid on the Table of the House under sub-section (3) of section 61 of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]